மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : தலைவர் அவர்களே தொடர்ந்து பல தொழிற்சாலைகள் நஷ்டத்தில் இயங்கி வருகின்றன என்ற காரணத்தினால், புதிய முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. தென்னிந்திய தேயிலைத் தூள் ஏற்றுமதி உரிமையை வழங்கக் கோரி மத்திய அரசுக்கு அமைச்சரவர்கள் மூலமாக நேர்முகக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக தாய் சங்கமான, இன்கோசொவ் மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்றாவதாக சந்தையில் நல்ல விலை கிடைக்க தேயிலை புரோக்கர் நிறுவனம் ஒன்று நிறுவி, அங்கே நமது தேயிலை மற்றும் டான்டீ தேயிலையை தனி புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்ய நமது அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல், இதற்கு முன்னாலே 4, 5 புரோக்கர்கள் மூலமாக விற்பனை செய்யப்பட்டு வந்தது. இப்போது அதை மாற்றி, தொழில் வணிகத் துறை இயக்குநர் அவர்களுடைய தலைமையிலே,

Managing Director Incoserve

Managing Director, Tantea

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மூவர் கொண்ட ஒரு குழுவை நியமித்து தேயிலை புரோக்கிங் நிறுவனம் என்ற அமைப்பை நிறுவி அதன் மூலமாக விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

(40) கீழ்பவானி அணையிலிருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் விடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ச. பாலகிருஷ்ணன், டாக்டர் அ. பொன்னுசாமி, கா. செ. பழனிச்சாமி, பு. கோ. நாராயணன், துரை ராமசாமி, கு. அ. செங்கோட்டையன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பெரியார் மாவட்டம், கீழ்பவானி அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் நான்கு முறை தண்ணீர் விடப்

கவன ஈர்ப்புகள்

(திரு. ச. பாலகிருஷ்ணன்)

படும் என்ற அறிவிப்பை நம்பி பயிர் செய்துள்ள நிலையில் தற்பொழுது இரண்டு முறையுடன் தண்ணீர் நிறுத்தப்பட்டுவிடும் என்று சொல்லப்படுவதால் அந்தப் பகுதி விவசாயிகள் மத்தியில் ஏற்பட்டுள்ள கவலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

பெரியார் மாவட்டம், பவானிசாகரில் இரண்டாம் முறைப் பாசனத்திற்கு தண்ணீர் 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாள் வரை திறந்து விடப்பட்டது. நீர்த் தேக்கத்தில் போதுமான நீரளவு இல்லாததால் எள்ளு பயிர் மட்டுமே பயிரிட வேண்டும் என்றும் மற்ற பயிர்களை பயிரிடக் கூடாதென்றும் அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ளது. எத்தனை முறை தண்ணீர் விடப்படும் என்று அறிவிப்பில் குறிப்பிடவில்லை. எள்ளு பயிர் ஒரு குறுகிய காலப் பயிர். முதல் தண்ணீர் 1985ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 8ஆம் நாள் வரை தரப்பட்டது. பிறகு பாசனப் பரப்பில் மழையும் பெய்தது. இரண்டாவது தண்ணீர் 1986ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் முதல் 1986ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 3ஆம் நாள் வரை விடப்பட்டது. இவ்வாறு இரண்டு முறை விடப்பட்ட நீரும் மற்றும் பாசனப் பரப்பில் பெய்த மழையும் அறிவிக்கப்பட்ட எள்ளு பயிருக்கு போதுமானது.

இருந்தாலும் பாசனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள 98,692 ஏக்கரில் 57,310 ஏக்கரில் பாசனம் செய்யப்பட்டது. இதில் 22,358 ஏக்கரில் எள்ளு பயிரும் 11,666 ஏக்கரில் கடலையும் மற்றதில் கரும்பு, சோளம், மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளன. கரும்பு, சோளம், கடலை, மஞ்சள் பயிர்கள் கிணற்று நீரைக் கொண்டு சாகுபடி செய்யப்பட்டன. இவை கிணற்று நீரைக் கொண்டே விளைவித்து விடலாம்.

விவசாயிகள் இப் பகுதியில் குடிநீர் பற்றாக்குறை இருப்பதால் மேலும் தண்ணீர் அனுப்புமாறு கோரினார்கள். பவானிசாகர் நீர்த் தேக்கத்தில் தற்போதைய (1986ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 7ஆம் நாள்) நீரின் அளவு 2,185 மி.கன.அடி. இதில் கால்வாயில் உபயோகிக்கக் கூடியது சுமார் 750 மி. க.அடி. இது ஒரு முறை தண்ணீர் விட போதுமானதல்ல. இருக்கும்

நீரைக் கொண்டு குடிநீர் பற்றாக் குறையை நீக்க தண்ணீர் வழங்குவது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. ச. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் எங்களுக்கு இங்கே வைக்கப்பட்டுள்ள அறிக்கையிலே அந்தத் தகவல் எதுவுமில்லை. இருந்தாலும், கீழ்பவானி அணையிலே ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி ஆண்டுதோறும் தண்ணீர் திறந்துவிடப்படும். கடந்த ஆண்டு தண்ணீர் திறந்து விடப்படக்கூடிய தேதியிலே அணையிலே போதுமான தண்ணீர் இருந்தும்கூட, ஏன் திறந்துவிடப்படவில்லை? அணையிலே இருக்கிற தண்ணீரை தஞ்சாவூருக்கு திறந்து விட்டு விட்டு, பெரியார் மாவட்டத்தை வறண்ட பாலைவனமாக்கிய அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா? இந்த ஆண்டாவது ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி அன்று தஞ்சாவூருக்கு தண்ணீர் விடாமல் பெரியார் மாவட்டத்திலே பாசனம் பெறுகின்ற கீழ் பவானி அணையின் மூலம் பாசனம் பெறுகின்ற பகுதிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, கீழ்பவானி அணைத் தண்ணீரை பெரியார் மாவட்டத்திற்கு விடுவதற்கு அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை வரவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது அவருக்கு அனுப்பி வைக்கப்படும். ஏற்கனவே அணையில் தண்ணீர் இல்லாத காரணத்தினாலே தண்ணீர் வராது, எனவே, எள் போன்ற பயிர்களைப் பயிரிட வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம். வேறு பயிர்களைப் பயிரிட வேண்டாம் என்று அரசு அறிவித்திருக்கிறது.

(41) உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதிக்கு முறைப்படி தண்ணீர் வழங்குவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் கு. ரமணி, வி. பி. சிந்தன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை பிரதான கால்வாய் பாசனப் பகுதியில் 60,000 ஏக்கர் நிலத்தில் நெல், கடலை, சோளப்பயிர் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளதற்கு